**மோட்டார் வாகன விபத்துக்கள் விசாரணை தீர்ப்பாயம், ஓமலூர், சேலம் மாவட்டம்.**
**(சார்பு நீதிமன்றம், ஓமலூர், சேலம் மாவட்டம்)**

முன்னிலை.- **திரு.கே.தயாநிதி, எம்.ஏ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி, ஓமலூர்.**

2020 **ம்** ஆண்டு **நவம்பர்** மாதம் 2 **ம்** நாள் **திங்கட்கிழமை**

<u>எம்.சி.ஓ.பி.எண்.211/2018</u>

மூர்த்தி ...மனுதாரர்

/எதிராக/

1. N.சுதாகர்
2. நிர்வாக இயக்குநர், T.S.T.C. சேலம், ... எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக என் முன்பாக கொண்டு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.கண்ணன், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் நீதிமன்றம் அழைத்து ஆஜராகாததால் அவரை தோன்றா தரப்பினராக தீர்வு செய்தும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.துரைராஜ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்டும், மனு சங்கதிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்து, இந்நீதிமன்றம் இன்று வழங்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.10,00,000/-ஐ செலவுத் தொகையுடன் வழங்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்.-</u>**

கடந்த 16.01.2018 ம் தேதி மனுதாரரும், அவருடைய மனைவியும் மாலை சுமார் 4.30 மணியளவில் TN-30-N-0371 என்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பயணம் செய்தபோது தர்மபுரி டு சேலம் தேசிய நெடுஞ்சாலையில் காமலாபுரம் பிரிவு ரோடு அருகே சென்றபோது மேற்படி பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி திடீரென பிரேக் போட்ட காரணத்தினால் மனுதாரர் பேருந்திலிருந்து நிலை

தடுமாறி கீழே விழுந்துவிட்டார். அதனால் மனுதாரருக்கு வலது நெற்றி, வலது கண் அருகில் காயம், மூக்கில் இரத்த காயம், இடது மணிக்கட்டு இணைப்பில் காயம், இடது கையில் சிராய்ப்பு காயம் மற்றும் இரண்டு முழங்காலிலும் மற்றும் இரண்டு கால் பாதங்களிலும் உள்அடிப்பட்டது. வலது தோள்பட்டையிலும் காயங்கள் ஏற்பட்டது. அடிப்பட்ட மனுதாரரை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்றுக்கொண்டார். விபத்திற்கு முன்பு மனுதாரர் கைத்தறி மற்றும் பெயின்டர் வேலை செய்து மாதம் 15,000/-த்திற்கு மேல் சம்பாதித்து வந்தார். விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தற்போது அந்த வேலையை செய்ய முடியாமல் வருமான இழப்பு ஏற்பட்டுவிட்டது. இந்த விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள், வலி, வேதனை, வருமான இழப்பு ஆகியவைகளுக்காக ரூ.10,00,000/- நஷ்டஈடு கேட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவின் சுருக்கம்.-**

மனு சட்டத்தின்படியும், நியாயத்தின்படியும் நிலைக்கக் கூடியதில்லை. மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார். இந்த விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டது. விபத்திற்கு முன்பு மனுதாரர் ரூ.15,000/-த்திற்கு மேல் சம்பாதித்து வந்ததாக சொல்வது தவறு. விபத்தன்று TN-30-N-0371 என்ற அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் மெதுவாகவும், கவனத்துடனும் ஓட்டியதாகவும், மனுதாரர் திடீரென பேருந்திலிருந்து குதித்துவிட்ட காரணத்தினால் அவருக்கு காயம் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் மனுதாரர் குடிபோதையில் இருந்தார். அதனால் இந்த விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள். எனவே மனுதாரர், 2 ம்எதிர்மனுதாரரிடமிருந்து நஷ்டஈடு கோர முடியாது. அதனால் 2 ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினைகள் யாதெனில்:-</u>**

1. இவ்விபத்து பதிவு எண் TN-30-N-0371 என்ற அரசு பேருந்தின் ஓட்டுநரின் அதிகவேகம் மற்றும் அஜாக்கிரதையின் காரணமாக ஏற்பட்டதா?

2. மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்க கூடியதா? அவ்வாறெனில் எவ்வளவு?

5. இம்மனுவில் மனுதாரர் தரப்பில் மசா.1 மற்றும் மசா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, மசாஆ.1 முதல் 7 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி எமசா.1 விசாரிக்கப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>பிரச்சினை 1:-</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டு, இந்த மனுவின் மனுதாரர் மற்றும் 2 ம்எதிர்மனுதாரர் முன்னிலைப்படுத்தியுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலிக்கையில், கடந்த 16.01.2018 ம் தேதி மனுதாரரும், அவருடைய மனைவியும் மாலை சுமார் 4.30 மணியளவில் TN-30-N-0371 என்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பயணம் செய்தபோது தர்மபுரி டு சேலம் தேசிய நெடுஞ்சாலையில் காமலாபுரம் பிரிவு ரோடு அருகே சென்றபோது மேற்படி பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி திடீரென பிரேக் அடித்த காரணத்தினால் மனுதாரர் பேருந்திலிருந்து நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், அதனால் மனுதாரருக்கு வலது நெற்றி, வலது கண் அருகில் காயம், மூக்கில் இரத்த காயம், இடது மணிக்கட்டு இணைப்பில் காயம், இடது கையில் சிராய்ப்பு காயம் மற்றும் இரண்டு முழங்காலிலும் மற்றம் இரண்டு கால் பாதங்களிலும் உள்அடிப்பட்டது என்றும், வலது தோள்பட்டையிலும் காயங்கள் ஏற்பட்டது என்றும், அடிப்பட்ட மனுதாரரை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும், விபத்திற்கு முன்பு மனுதாரர் கைத்தறி மற்றும்

பெயின்டர் வேலை செய்து மாதம் 15,000/-த்திற்கு மேல் சம்பாதித்து வந்ததாகவும், விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தற்போது அந்த வேலையை செய்ய முடியாமல் வருமான இழப்பு ஏற்பட்டது என்றும், இந்த விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள், வலி, வேதனை, வருமான இழப்பு ஆகியவைகளுக்காக ரூ.10,00,000/- நஷ்டஈடு கேட்டு மனு தாக்கல் செய்திருப்பதாக மனுதாரர் தரப்பில் வாதம் எடுத்துரைக்கப்பட்டது.

7. அதற்கு மாறாக 2ம்எதிர்மனுதாரர் தரப்பில், இந்த விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும், விபத்தன்று TN-30-N-0371 என்ற அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் மெதுவாகவும், கவனத்துடனும் ஓட்டியதாகவும், மனுதாரர் திடீரென பேருந்திலிருந்து குதித்துவிட்ட காரணத்தினால் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றும், மேற்படி மனுதாரர் குடிபோதையில் இருந்த காரணத்தினால் பேருந்திலிருந்து குதித்துவிட்டார் என்றும், அதனால் இந்த விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும், அதனால் 2ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டுமென்றும் வாதம் எடுத்துரைக்கப்பட்டது.

8. மனுதாரர் தரப்பு வழக்கினை நிரூபணம் செய்வதற்காக மனுதாரர் மசாஆ.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி நபர் தன்னுடைய சாட்சியத்தில் கடந்த 16.01.2018ம் தேதி தானும், தன்னுடைய மனைவியும் பண்ணப்பட்டியில் உள்ள தன்னுடைய தங்கை வீட்டிற்கு செல்வதற்காக TN-30-N-0371 என்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பயணம் செய்ததாகவும், அப்போது தர்மபுரி டு சேலம் தேசிய நெடுஞ்சாலையில் காமலாபுரம் பிரிவு ரோடு அருகே பேருந்து சென்றுக்கொண்டிருந்தபோது மேற்படி பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து திடீரென பிரேக் அடித்த காரணத்தினால் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், அதனால் தனக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது என்றும், அடிப்பட்ட தன்னை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும், இந்த விபத்திற்கு முன்பு தான் கைத்தறி மற்றும் பெயின்டர் வேலை செய்து மாதம் 15,000/-த்திற்கு மேல் சம்பாதித்து வந்ததாகவும், தற்போது அந்த வேலையை செய்ய முடியாமல் வருமான இழப்பு

ஏற்பட்டது என்றும், தனக்கு ஏற்பட்ட காயங்கள், வலி, வேதனை, வருமான இழப்பு ஆகியவைகளுக்காக ரூ.10,00,000/- நஷ்டஈடு கேட்டு மனு தாக்கல் செய்திருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அதனைத் தொடர்ந்து விபத்து அன்று மனுதாரருடன் அரசு போக்குவரத்து கழக பேருந்தில் பயணம் செய்த அவருடைய மனைவி மசா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுயைட சாட்சியத்தில் 16.01.2018 ம் தேதியன்று மாலை சுமார் 4.30 மணிக்கு தானும், தன்னுடைய கணவரும் பேருந்து பஸ்ரூட் நெ.80 **TN**-30-**N**-0371 **TSTC** என்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பேருந்தில் பயணம் செய்தபோது தர்மபுரி டு சேலம் தேசிய நெடுஞ்சாலையில் காமலாபுரம் பிரிவு ரோடு அருகே சென்றுக்கொண்டிருந்தபோது மேற்படி அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி திடீரென பிரேக் அடித்ததால் தன்னுடைய கணவர் பேருந்திலிருந்து தடுமாறி கீழே விழுந்துவிட்டார் என்றும், அதனால் அவருக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது என்றும், அடிப்பட்ட தன்னுடைய கணவரை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்த்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. இந்த விபத்தானது 1 ம்எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக சொல்லி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளனர். அந்த முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு மசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக அவர் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றதற்கான விபத்து பதிவேடு தாக்கல் செய்யப்பட்டு மசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1 ம்எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்பட்டு மசாஆ.3 ஆகவும், **TN**-30-**N**-0371 என்ற தமிழ்நாடு அரசு பேருந்தின் பதிவு புத்தகம் தாக்கல் செய்யப்பட்டு மசாஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும், மசா.1 மற்றும் மசா.2 ன் வாய்மொழி சாட்சியங்களையும் கவனத்துடன் பரிசீலிக்கையில் 16.01.2018 ம் தேதி மாலை சுமார் 4.30 மணிக்கு மனுதாரர் **TN**-30-**N**-0371 என்ற தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக

பேருந்தில் பேருந்தில் பயணம் செய்தபோது அந்த பேருந்தின் ஓட்டுநரான 1ம்எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று திடீரென்று பிரேக் அடித்த காரணத்தினால் மனுதாரர் பேருந்திலிருந்து தவறி விழுந்ததன் காரணமாக அவருக்கு உடல் முழுவதும் சாதாரண காயங்கள் ஏற்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

11. ஆனால் அதற்கு மாறாக 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தன்று மனுதாரர் அரசு பேருந்தில் பயணம் செய்த சமயத்தில் குடித்துவிட்டு பயணம் செய்த காரணத்தினால் அவராகவே பேருந்திலிருந்து குதித்துவிட்டார் என்றும், அதனால்தான் அவருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும், இந்த விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும், அவற்றை நிரூபணம் செய்வதற்காக விபத்தன்று அரசு பேருந்தை ஓட்டிய 1ம்எதிர்மனுதாரர் எமசா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி நபர் 1ம்எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளபோதிலும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்ட பின்பு 2ம்எதிர்மனுதாரருக்கு ஆதரவாக எமசா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி நபர் தன்னுடைய சாட்சியத்தில் விபத்தன்று மனுதாரரும், அவருடைய மனைவி மற்றும் பல பயணிகள் தான் ஓட்டிய அரசு பேருந்தில் பயணம் செய்ததாகவும், அப்போது மனுதாரர் குடிபோதையில் இருந்த காரணத்தினால் திடீரென்று பேருந்திலிருந்து குதித்துவிட்டதாகவும், அதனால் காயங்கள் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

12. ஆனால் அவற்றை நிரூபணம் செய்வதற்காக விபத்தன்று பேருந்தில் பயணம் செய்த பயணிகளோ அல்லது அரசு பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்த நபரையோ விசாரணை செய்து இந்த விபத்தானது மனுதாரரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்பதை நிரூபணம் செய்ய முன்வரவில்லை. மெதுவாக ஓட்டுநர்கள் முன்னால் பார்த்து கவனத்துடன் பேருந்தை ஓட்டுவார்களே தவிர பேருந்தின் உள்ளே என்ன நடக்கிறது என்பதை பார்த்து பேருந்தை ஒட்டியிருக்க முடியாது. ஆதலால் விபத்தன்று அரசு பேருந்தில் 1ம்எதிர்மனுதாரர் ஓட்டுநராக இருந்த காரணத்தினால் பேருந்தின் மத்திய கண்ணாடியில் பேருந்தின் உள்ளே பார்த்தபோது மனுதாரர் குடிபோதையில்

அவராகவே பேருந்திலிருந்து குதித்துவிட்டார் என்று சொல்லும் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை. இந்த சூழ்நிலையில் இந்த விபத்தானது TN-30-N-0371 என்ற அரசு பேருந்தை ஓட்டிய ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்பது பற்றி மனுதாரர் தரப்பில் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்து வாய்மொழி சாட்சியம் அளித்து நிரூபணம் செய்துள்ளனர். ஆதலால் இந்த விபத்தானது TN-30-N-0371 என்ற அரசு பேருந்தை ஓட்டிய 1 ம்எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று முடிவு செய்யப்பட்டு அவ்வாறே மேற்கண்ட பிரச்சனை 1 க்கு தீர்வு காணப்படுகிறது.

13. **<u>பிரச்சனை 2.-</u>**

இந்த விபத்தானது 1 ம்எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி 1 ம்எதிர்மனுதாரர், 2 ம்எதிர்மனுதாரரின் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருவதால் விபத்தில் அடிப்பட்ட மனுதாரருக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சொற்ப காயங்கள் என்பதை மசாஆ.2 ன் மூலமாக அறிய முடிகிறது. மேற்படி காயங்களினால் மனுதாரருக்கு வருமான இழப்பு ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. விபத்தில் மனுதாரருக்கு மொத்தம் 6 சாதாரண காயங்கள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி காயங்களுக்காக எதிர்மனுதாரர்களிடமிருந்து மனுதாரருக்கு ரூ.27,000/- நஷ்டஈடாக கிடைக்க கூடியது. விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தினால் வலி, வேதனை ஏற்பட்டிருக்க கூடும். அந்த வலி, வேதனைக்காக ரூ.1,000/-மும், போக்குவரத்து செலவுகளுக்காக ரூ.1,000/-மும், விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்தினால் அவர் ஊட்டச்சத்து சாப்பிட்டிருக்க கூடும். அந்த ஊட்டச்சத்திற்காக ரூ.1,000/-மும் மனுதாரருக்கு நஷ்டஈடாக கிடைக்க கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகமொத்தம் மனுதாரருக்கு ரூ.30,000/- 1, 2 எதிர்மனுதாரர்களிடமிருந்து நஷ்டஈடாக கிடைக்க கூடியது.

முடிவில், இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகையாக ரூ.30,000/-ஐ மனுதாரருக்கு செலுத்தவேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகையை வைப்பீடு செய்யும் நாள் வரையில் ஆண்டொன்றுக்கு 7.5% வட்டியுடன் வழக்கு செலவுத் தொகையையும் சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் ஓமலூர் மோட்டார் வாகன விபத்துகள் தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கு எண் 37482602208-ல் வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், மேற்படி மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகையை அதற்குரிய வட்டி மற்றும் வழக்கு செலவுத் தொகையையும் சேர்த்து இந்நீதிமன்றத்தில் நேரடியாக பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், மனுதாரரின் வழக்கறிஞர் கட்டணத்தை பொருத்து உரிய முறையில் கணக்கீடு செய்து காசோலையாக எதிர்மனுதாரர்கள் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின் 2020 ம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./ கே.தயாநிதி
சார்பு நீதிபதி,
ஓமலூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்.-**

மசா.1 மூர்த்தி
மசா.2 வித்தியகலா

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.-**

| | | |
|---|---|---|
| மசாஆ.1 | -- | முதல் தகவல் அறிக்கை நகல் |
| மசாஆ.2 | -- | விபத்து பதிவேடு நகல் |
| மசாஆ.3 | -- | 1 ம்எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் |
| மசாஆ.4 | -- | பேருந்தின் பதிவு புத்தகம் நகல் |
| மசாஆ.5 | -- | மனுதாரரின் குடும்ப அட்டை நகல் |
| மசாஆ.6 | -- | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |

| | | |
|---|---|---|
| மசாஆ.7 | -- | சிகிச்சையின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் அசல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**

எமசா.1 சுதாகர்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்.-** இல்லை

**நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள் .-**

நீமசாஆ.1 ஓமலூர் அரசு மருத்துவமனை மருத்துவக்குழுவானது மனுதாரருக்கு வழங்கிய ஊனச்சான்று அசல்

ஒம்./-கே.தயாநிதி,
சார்பு நீதிபதி,
ஓமலூர்.

/ உண்மை நகல் /

ஒம்./-கே.தயாநிதி,
சார்பு நீதிபதி,
ஓமலூர்.